## விண்மீன் நடப்பு நிகழ்வுகள்

**1) 2018 ஆம் ஆண்டுக்கான சர்வதேச காந்தி அமைதிப் பரிசு யாருக்கு வழங்கப்பட்டது? [International Gandhi Peace Prize for 2018]**

**A]** யொகேய் சசகவா

**B]** தேஸ்மன் டுட்டு

**C]** சன்டி பிரசாத் பட்

**D]** ஜான் ஹுயூம்

- ✓ கடந்த பிப்ரவரி மாதம் **26**ஆம் தேதி குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் அவர்களால் **2015, 2016, 2017, 2018** ஆம் ஆண்டுக்கான சர்வதேச காந்தி அமைதிப் பரிசு ராஷ்டிரபதி பவனில் வழங்கப்பட்டது.
- ✓ இந்தியா மற்றும் உலகமெங்கும் தொழுநோயை ஒழிப்பதற்காக பங்காற்றியதால் ஜப்பானை சேர்ந்த யொகேய் சசகவா என்பவருக்கு **2018** ஆம் ஆண்டிற்கான விருது வழங்கப்பட்டது.
- ✓ இந்தியாவின் கிராமப்புற மற்றும் மலைவாழ் மக்களின் குழந்தைகளுக்கு கல்வி, சமூக நடுநிலைமை மற்றும் கிராமப்புற மேம்பாடு ஆகியவற்றில் சிறந்த பங்கினை ஆற்றியமைக்காக ஏகல் அபியான் என்ற அறக்கட்டளைக்கு **2017** ஆம் ஆண்டிற்கான விருது வழங்கப்பட்டது.
- ✓ கிராமப்புற மேம்பாடு, கல்வி மற்றும் இயற்கை வளங்களை மேம்படுத்துதல் போன்ற துறைகளில் கவனம் செலுத்தியதால் கன்னியாகுமரியை தலைமையிடமாகக் கொண்ட விவேகானந்தா கேந்திரா என்ற நிறுவனத்திற்கு **2015**ஆம் ஆண்டுக்கான விருது வழங்கப்பட்டது.
- ✓ இந்தியாவைச் சேர்ந்த **10** லட்சத்திற்கும் அதிகமான குழந்தைகளுக்கு மதிய உணவு வழங்கிய அக்ஷய பாத்திரம் என்ற நிறுவனத்திற்கும் கிராமப்புற சுகாதாரம் மற்றும் ஆரோக்கியத்தை மேம்படுத்திய சுலப் இன்டர்நேஷனல் என்ற நிறுவனத்திற்கும் **2016**ஆம் ஆண்டுக்கான விருது பகிர்ந்தளிக்கப்பட்டது.
- ✓ இந்த விருதில் ரொக்கப்பரிசாக ரூபாய் ஒரு கோடியும் அவர்களது பங்களிப்பை மேற்கோள் காட்டிய சான்றிதழ்களும் கைவினைப் பொருட்களும் அடங்கும்.

**2) Skill saathi youth conclave எந்த மாநிலத்தில் தொடங்கிவைக்கப்பட்டது?**

**A]** கொச்சி

**B]** புவனேஸ்வர்

winmeen.com

**C]** ஐதராபாத்

**D]** சிம்லா

- ✓ முதல்முறையாக **Skill saathi youth conclave**யை ஒடிசா மாநிலம் ,புவனேஸ்வரில் உள்ள ரயில் அரங்கத்தில் மத்திய திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் தர்மேந்திர பிரதான் அவர்கள் தொடங்கி வைத்தார்.
- ✓ இதன் மூலம் அம்மாநில இளைஞர்களின் திறனை மேம்படுத்துவதோடு வேலைவாய்ப்புக்கான வழிகளையும் மேம்படுத்துவதாய் அமைகிறது. இந்நிகழ்ச்சி ஒடிசாவில் **427** இடங்களில் நேரலையாக ஒளிபரப்பப்பட்டது.
- ✓ இதன் மூலம் **2** லட்சத்திற்கும் மேற்பட்ட பயனாளிகள் கலந்துகொண்டு தொழில் ஆலோசனை பெற்றுக் கொண்டனர். இதன் நோக்கம் ஒவ்வொரு தனிநபரின் விருப்பங்களையும் புரிந்துகொண்டு அவர்களுக்கான தொழில் வழிகளை உளவியல் ரீதியான சோதனைகள், நேர்முக ஆலோசனைகள் மற்றும் பல விதங்களில் அவர்களை வழி நடத்துவதே ஆகும்.

**3) 2019 - Cannes International open trophy வென்ற இந்திய கிராண்ட் மாஸ்டர் யார்?**

**A]** கிருஷ்ணன் சசிகரன்

**B]** பரிமர்ஜன் நெஹி

**C]** பந்தல ஹரிகிருஷ்ணா

**D]** அபிஜித் குப்தா

- ✓ **2019** ஆம் ஆண்டிற்கான **Cannes International open** யை இந்தியாவின் செஸ் கிராண்ட் மாஸ்டர் அபிஜித் குப்தா அவர்கள் **7.5** புள்ளிகள் பெற்று வென்றார்.
- ✓ இத்தாலியை சேர்ந்த பயர் லூஹீ பஸோ என்பவரை ஒன்பதாவது மற்றும் இறுதிச்சுற்றில் சுலபமாக தோற்கடித்தார். இந்தப் புள்ளி பெலாரஸை சேர்ந்த நிகிதா மயூரோவ் போலந்தைச் சேர்ந்த நாசுதா மற்றும் உக்ரைனைச் சேர்ந்த யுரீ சோலோடோநி செகோ அவர்களின் புள்ளிகளை விட அதிகமானது ஆகும்.

**4) சமீபத்தில் செய்திகளில் காணப்பட்ட பந்திப்பூர் புலிகள் சரணாலயம் எந்த மாநிலத்தில் அமைந்துள்ளது?**



winmeen.com

A] உத்தரப் பிரதேசம்

B] கர்நாடகா

C] ஒடிசா

D] தெலுங்கானா

- ✓ கர்நாடக மாநிலம் சாம்ராஜ்நகர் மாவட்டத்தில் உள்ள பந்திப்பூர் புலிகள் சரணாலயத்தில் மிகப்பெரிய காட்டுத் தீ பரவியது.
- ✓ இதனால் 2000 ஹெக்டேர் வன பரப்பளவு சேதமடைந்தது. நூற்றுக்கும் மேற்பட்ட வன அதிகாரிகளும் பொதுமக்களும் இணைந்து தீயை அணைக்க முற்பட்டனர்.
- ✓ இருப்பினும் பலமான காற்று மற்றும் காய்ந்த புல் காட்டுத்தீயை மேலும் பரவச் செய்தது. இதனால் தேசிய நெடுஞ்சாலை 67 (ஊட்டி டு மைசூர்) மூடப்பட்டதால் போக்குவரத்து சிக்கல் சில மணி நேரம் நீடித்தது. வன உயிர்களும் இறக்க நேர்ந்ததாய் கூறப்படுகிறது. இருப்பினும் அதிகாரப்பூர்வமான அறிவிப்பு இன்னும் வெளியிடப்படவில்லை.
- ✓ இந்த பந்திப்பூர் சரணாலயம் இந்தியாவின் முதலாவதாக ஆரம்பிக்கப்பட்ட தேசிய பூங்காக்களில் ஒன்றாகும். மேலும் உலகில் உள்ள குறிப்பிட்ட இடங்களில் அதிகமான புலிகளின் எண்ணிக்கையை கொண்டது குறிப்பிடத்தக்கது. யானைகளுக்கான சரணாலயமும் இங்கே உள்ளது. 87400 ஹெக்டேர் பரப்பளவு கொண்டது. இதனுடன் வயநாடு வனவிலங்கு சரணாலயமும் நாகர்ஹோல் தேசிய பூங்காவும் அமைந்துள்ளன. இங்கே யானைகள், புலிகள், அரிய வகை பாம்புகள் மற்றும் காட்டெருமை போன்ற எளிதில் பாதிக்கப்படக்கூடிய விலங்குகள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

**5) "India in Distress" என்ற நூலை எழுதிய இந்திய அரசியல் தலைவர் யார்?**

A] சசிதரூர்

B] அரவிந்த் கெஜ்ரிவால்

C] மம்தா பானர்ஜி

D] சோனியாகாந்தி

- ✓ **India in Distress** என்ற நூலை மேற்குவங்க முதலமைச்சர் மம்தா பானர்ஜி அவர்கள் எழுதினார்.

- ✓ அந்நாட்டின் தலைநகரில் பிப்ரவரி மாதம் **27**ஆம் தேதி வெளியிடப்பட்டது. **87** புத்தகங்களை இதுவரையிலும் எழுதியுள்ளார்.
- ✓ இந்த ஆண்டு அவர் எழுதிய ஏழு புத்தகங்களுள் சில குழந்தைகளுக்காகவும் பெங்காலி, உருது மற்றும் ஆங்கிலத்தில் கவிதைகளும் அரசியல் சார்ந்த இரண்டு புத்தகங்களை ஹிந்தியிலும் பெங்காலியிலும் இயற்றியுள்ளார்.

**6)** கீழ்க்காணும் எந்த துறைமுகத்தின் வழியாக இந்தியா உடனான புதிய ஏற்றுமதிக்கான வழியை ஆப்கானிஸ்தான் தேர்ந்தெடுத்துள்ளது?

**A]** அபதன்

**B]** சபஹர்

**C]** பந்தர்

**D]** கொரம்சர்

- ✓ சபஹர் துறைமுகத்தை ஆப்கானிஸ்தான் இந்தியாவுடனான ஏற்றுமதிக்கான புதிய கடல் வழியாக தேர்ந்தெடுத்துள்ளது.
- ✓ இத்துறைமுகம் ஈரானில் உள்ளது. அதிகாரப்பூர்வமான அறிக்கையின்படி முதல் ஏற்றுமதியாய் **57** டன்கள் உலர்ந்த பழங்கள், ஜவுளி வகைகள், கம்பளங்கள் மற்றும் கனிம பொருட்களை **23** லாரிகளில் மேற்கு ஆப்கான் நகரத்தில் இருந்து சபஹர் துறைமுகத்திற்கு கொண்டுவந்து சேர்த்துள்ளது. இப்பொருட்கள் மும்பை துறைமுகத்தை வந்தடையும். ஈரானிய துறைமுகத்தை தேர்ந்தெடுத்ததற்கான காரணம் இந்தியாவுடனான ஏற்றுமதி-இறக்குமதிகளை மிக சுமூகமாக கையாளுவதே ஆகும்.

**7) 46** ஆவது **( Foreign ministers OIC )** கூட்டத்திற்கு இந்தியாவை அழைப்பு விடுத்திருந்தது. இதனை அடிப்படையாகக் கொண்டு கீழ்காண்பவைகளில் எது தவறானது என்பதை அறிக.

**A]** இந்தியா **OIC** யின் உறுப்பினராகும்

**B]** இதன் அதிகாரப்பூர்வமான மொழிகள் அரபி ஆங்கிலம் மற்றும் பிரெஞ்சு

**C]** இந்தியா இதன் உறுப்பினரோ அல்லது பார்வையாளரை கிடையாது

Winmeen.com

D] இதன் தலைமையிடம் ஜெட்டாவில் உள்ளது

- ✓ **Foreign ministers of the organisation of Islamic cooperation - 46** ஆவது இஸ்லாமிய கூட்டமைப்பின் வெளிநாட்டு அமைச்சர்கள் மாநாடு ஐக்கிய அரபு அமீரகத்தில் உள்ள அபுதாபியில் கடந்த மார்ச் **1, 2** ஆம் தேதிகளில் நடந்தது.
- ✓ வெளியுறவுத் துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜ் இதில் கலந்து கொண்டார்.
- ✓ முஸ்லிம் அல்லாத நாட்டின் தலைவர் கலந்து கொண்ட முதல் மாநாடு இதுவே ஆகும். இதன் மூலம் மேற்கு ஆசியா மற்றும் இஸ்லாமிய மக்கள் தொகை அதிகம் கொண்ட நாடுகள் இடையே ஒரு இணக்கத்தை ஏற்படுத்துவதாக அமையும்.
- ✓ இந்தியா இதை யுஏஇ உடன் நட்பு பாராட்ட சிறந்த சந்தர்ப்பமாக எடுத்துக்கொண்டது.
- ✓ இது இந்தியாவில் வாழும் **185** மில்லியன் முஸ்லிம்களையும் இஸ்லாமிய உலகத்திற்கான இந்தியாவின் பங்களிப்பையும் போற்றும் விதமாக அமைந்தது. இம்மாநாட்டின் அதிகாரப்பூர்வமான மொழிகள் அரபி, ஆங்கிலம் மற்றும் பிரெஞ்ச் ஆகும்.

**8) "RTGS டாலர்" என்ற புதிய நாணயத்தை வெளியிட்ட நாடு எது?**

A] துருக்கி

B] மொராக்கோ

C] ஜிம்பாவே

D] சிறே லியோன்

- ✓ ஜிம்பாவே தனது புதிய நாணயமான **RTGS** டாலர் - யை வெளியிட்டது. **Real Time Gross settlement** என்பதே **RTGS**ன் விரிவாக்கம் ஆகும்.
- ✓ நாள்பட்ட நிதி நெருக்கடியை சரி செய்வதற்காக ஜிம்பாப்வேயின் ரிசர்வ் வங்கி நாணயத்தை வெளியிட்டது. இந்நாணயம் டிஜிட்டல் டாலர்கள் மற்றும் பத்திர குறிப்புகள் போன்றவற்றிற்கு பதிலாக கூட பயன்படுத்த முடியும்.
- ✓ தொடக்கத்தில் ஒரு **US** டாலருக்கு **2.5** ஆர்டிஜிஎஸ் டாலராக இதன் மதிப்பு அறிமுகப்படுத்தப்பட்டது.
- ✓ இந்த டாலர் பத்திர குறிப்புகள் கடன் அட்டைகள் மற்றும் மொபைல் பண பரிமாற்றங்கள் போன்றவற்றைக் ஒருங்கிணைத்து சமநிலையை கையாள்கிறது.

9) 2019 - IAA World congress ன் கருப்பொருள் என்ன?

A] பிராண்ட் தர்மா - **Brand Dharma**

B] பிராண்ட் ஃபேஷன் - **Brand Fashion**

C] பிராண்ட் இன்னோவேஷன் - **Brand Innovation**

D] பிராண்ட் எவாலுூவேசன் - **Brand Evaluation**

- ✓ **44** ஆவது சர்வதேச விளம்பர சங்கத்தின் **IAA World congress** கடந்த பிப்ரவரி மாதம் **20**ஆம் தேதி முதல் **22**ம் தேதி வரை கொச்சியில் உள்ள **grand hyatt** சர்வதேச மாநாட்டு மையத்தில் நடந்தது. இதன் கருப்பொருள் பிராண்ட் தர்மா ஆகும்.
- ✓ இதன் மூலம் ஒரு தயாரிப்பு நிறுவனம் எளிதாக மக்களைச் சென்றடைய கையாளும் முறைகளை கற்பித்தது. இந்தியா மற்றும் வெளிநாடுகளைச் சேர்ந்த **2000**த்திற்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் இதில் கலந்து கொண்டனர். நியூயார்க்கை தலைமையிடமாகக் கொண்ட **IAA**
- ✓ **55** நாடுகளில் உள்ளது. விளம்பரதாரர்கள், விளம்பர நிறுவனங்கள் மற்றும் ஊடகங்களை தன்னகத்தே கொண்டுள்ளது.
- ✓ ஒரு ஆண்டு விட்டு ஒரு ஆண்டாக உலகம் முழுவதும் பல இடங்களில் இம்மாநாடு நடைபெற்று வருகிறது.

10) கீழ்க்காணும் எந்த மாநிலம் மதுவின் பயன்பாட்டை கண்டறிய சிறப்பு நாய்கள் அணியை கொண்டுள்ளது?

A] அஸ்ஸாம்

B] ஜார்க்கண்ட்

C] பஞ்சாப்

D] பீகார்

- ✓ மது அருந்தியதையோ மதுவின் பயன்பாட்டையோ கண்டறிவதற்காக சிறப்பு நாய்கள் அணியை பீகார் மாநிலம் அமைத்துள்ளது, இதுவே முதல் முறையாகும். இவ்வனைத்து நாய்களுக்கும்

ஹைதராபாத்தை தலைமையிடமாகக் கொண்ட ஒருங்கிணைந்த உளவுத்துறை பயிற்சி மையத்தில் **9** மாதங்கள் பயிற்சி அளிக்கப்பட்டு பீகார் போலீஸ் படையில் இணைக்கப்பட்டுள்ளது.

- ✓ இவ்வாறாக இதுவரையிலும் **68** நாய்கள் பீகார் போலீஸ் படையில் உள்ளது. ஒவ்வொரு நாய்க்கும் **1.71** லட்ச ரூபாய் செலவிடப்படுகிறது. மற்றும் ஒவ்வொரு நாய்க்கும் **2** கையாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். **2016**ஆம் ஆண்டு பீகார் மாநிலம் மதுவை தடை செய்தது என்பது குறிப்பிடத்தக்கது.

winmeen.com